தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 336/ந/2023
நாள் 22.11.2023

திரு. ரூபன் பொன்னுமணி,
தேம்பிறவிளை,
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
குளச்சல் நகராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், மேற்கு நெய்யூர் அஞ்சல், தேம்பிறவிளை, 17–48A என்ற முகவரியில் வசிக்கும் திரு. ரூபன் பொன்னுமணி என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.09.2023 அன்று பெறப்பட்டு 336/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், மேற்கு நெய்யூர் அஞ்சல், தேம்பிறவிளை, 17–48A என்ற முகவரியில் வசிக்கும் திரு. ரூபன் பொன்னுமணி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"கன்னியாகுமரி மாவட்டம், கல்லுக்கூட்டம் பேரூராட்சி எல்லை முடிந்து, குளச்சல் நகராட்சி எல்கை ஆரம்பிக்கும் இடத்தில் குளச்சல் நகராட்சி கட்டட அனுமதி எண்.148/BL/2020/00058, நாள். 05.08.2020 மற்றும் 148/BL/2022/005, நாள்.08.01.2022 பெற்றுள்ள கட்டடம், குளச்சல் – திங்கள்நகர் ரோட்டில் குளச்சல் அண்ணா சிலையின் கிழக்கே, கிரி தங்கம் மருத்துவமனை எதிரில் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டடம், கட்டடம் கட்டுதல் சம்பந்தமாக அரசு வகுத்துள்ள விதிமுறைகளை பின்பற்றாமல், சாலை ஓரத்திலுள்ள மழைநீர் வடிகால் ஓடையினை ஆக்கிரமித்து பில்லர் (Pillar) எழுப்பி கட்டப்பட்டு வருகிறது. இதனால் இப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் அருகிலுள்ள மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளும், பள்ளிகளுக்கு செல்லும் மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மேலும் மழைக்காலங்களில் மழைநீர், வடிகால் ஓடையில் செல்ல முடியாமல் ரோட்டில் தேங்குவதற்கும் வாய்ப்புள்ளது. மேலும் இவ்வணிக வளாகத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கும் எவ்வித வசதிகளையும் உருவாக்கவில்லை என்பதுடன் கட்டடத்தின்

முன்பகுதி ரோட்டினையும் Interlock கட்டைகளைப் பதித்து ஆக்கிரமித்துள்ளனர். இது சம்பந்தமாக நகர்மன்ற அதிகாரிகளை பலமுறை அணுகியும், நடவடிக்கைகள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. எனவே, தாங்கள் தயவு கூர்ந்து மேற்படி பகுதியினை ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கைகள் மேற்கொண்டு பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு போதிய வசதிகள் கிடைக்க வழிவகை செய்யும்படி பணிவுடன் வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் குளச்சல் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

குளச்சல் நகராட்சி ஆணையாளர் தனது 07.11.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:—

''குளச்சல் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு A/2, புல எண்.91/1,2—ன் முன்புறம் மழைநீர் வடிகால் ஓடையை ஆக்கிரமித்து பில்லர் அமைத்துள்ள புகார் மனு தொடர்பாக எனது விரிவான அறிக்கையினை கீழ்க்கண்டுள்ளவாறு பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

05.08.2020 மற்றும் 08.01.2022 நாளிட்ட குளச்சல் நகராட்சியின் கட்டட அனுமதி உத்தரவின்படி முறையே 1.திரு.முகம்மது பாரூக், 2.திரு.கலீல் ரஹ்மான் ஆகியோருக்கு குடியிருப்பு மற்றும் வணிகக் கட்டடம் கட்ட குளச்சல் நகராட்சியால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கட்டட உரிமையாளர் இரு கட்டட அனுமதியினையும் ஒருங்கிணைந்த வணிக மற்றும் குடியிருப்பு கட்டடமாக மாறுதல் செய்து கட்டியது தொடர்பாக கட்டட உரிமையாளருக்கு நகராட்சியால் அறிவிப்புகள் பதிவு தபாலில் அனுப்பப்பட்டு ஒப்புகை பெறப்பட்டுள்ளது.

கட்டட உரிமையாளரின் கட்டடத்திற்கு அணுகு சாலையாக நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலை அமைந்துள்ளது. மேற்படி நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையினை ஆக்கிரமித்து கட்டடம் ஏதும் கட்டப்படவில்லை என நகர சார் ஆய்வாளர் (நில அளவை) தனது 07.06.2023 ஆம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

கட்டட உரிமையாளர் தனது கட்டடத்தின் முன்புறம் தரை தளத்தில் 7 m x 22 m அளவில் (சுமார் 154 ச.மீ) வாகன நிறுத்துமிடம் விட்டுள்ளார்.

கட்டட உரிமையாளர் தனது கட்டடத்திற்கும், நெடுஞ்சாலைத்துறை சாலைக்கும் இடையில் உள்ள இடத்தில் இன்டர்லாக் டைல்ஸ், சாலை மட்டத்திற்கு அமைத்து வாகனங்கள் உள்ளே சென்று வருவதற்கு ஏதுவாக அமைத்துள்ளார். மழை நீர் வடிகால் ஓடையின் மேல் அமைத்துள்ள தரை, மழைநீர் செல்வதற்கு எவ்வித தடையும் இன்றி உள்ளது. மழை நீர் எவ்வித அடைப்பும் இன்றி வழிந்தோடுகிறது. மேலும் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையில் உள்ள நடைபாதை ஆக்கிரமிப்பு நெடுஞ்சாலை துறையால் அகற்றப்பட வேண்டும். மேற்படி விளக்கத்தினை பணிந்து சமர்ப்பிக்கின்றேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் குளச்சல் நகராட்சி ஆணையரும் 10.11.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.11.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. ரூபன் பொன்னுமணி 10.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"கன்னியாகுமரி மாவட்டம், கல்லுக்கூட்டம் பேரூராட்சி, குளச்சல் திங்கள் நகர் ரோட்டில் குளச்சல் அண்ணாசிலையின் கிழக்கே, கிரி தங்கம் மருத்துவமனை எதிரில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இக்கட்டடம், கட்டடம் கட்டுதல் சம்பந்தமாக அரசு வகுத்துள்ள விதிமுறைகளை பின்பற்றாமல், சாலை ஓரத்திலுள்ள மழைநீர் வடிகால் ஓடையினை ஆக்கிரமித்து பில்லர் (Pillar) எழுப்பி கட்டப்பட்டு வருகிறது. மேலும், மழைநீர் வடிகால்வாயின் மேற்புறம் கான்கிரீட் வைத்து மூடியுள்ளனர். மழைக்காலங்களில் நீர், மழைநீர் வடிகாலில் செல்லாமல் சாலையில் தேங்குகிறது. எனவே பொதுமக்களுக்கு மழைக்காலங்களில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இதுசம்பந்தமாக நகர் மன்ற அதிகாரிகளை பலமுறை அணுகியும் நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, மேற்கண்ட மழைநீர் வடிகாலை ஆக்கிரமித்து கட்டியுள்ள கட்டடத்தின் மீது நடவடிக்கை எடுத்தும், மேலும் மழைநீர் வடிகால்வாயின் மீது உள்ள சிலாபை சரியாக பொருத்திடவும் நகராட்சியினர் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான குளச்சல் நகராட்சி ஆணையர் திரு. துரை செந்தில்குமார் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் திரு. வெ.சேதுராஜன் ஆகியோர் 10.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"குளச்சல் நகராட்சி திங்கள் சாலையில் திரு முகம்மது பாரூக் த/பெ அபூபக்கர் குஞ்சு மற்றும் திரு கலீல் ரஹ்மான் த/பெ அபூபக்கர் குஞ்சு ஆகியோருக்கு, குடியிருப்பு மற்றும் வணிக கட்டடம் கட்ட குளச்சல் நகராட்சியால் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. கட்டட உரிமையாளர்கள் இரு கட்டட அனுமதிகளையும் ஒருங்கிணைந்த வணிக மற்றும் குடியிருப்பு கட்டடமாக மாறுதல் செய்து கட்டியுள்ளனர். எனவே விதிகளை மீறி மேற்கண்ட கட்டடங்கள் கட்டியது தொடர்பாக தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56(5)ன் கீழான Lock and seal Notice, 4.1.2023 அன்றும், carried out I contravention of planning permission notice, 3.3.2023 அன்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கட்டடப்பணிகளை மேற்கொள்வதை நிறுத்த வேண்டி நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56(1)ன் கீழ் அறிவிப்பும் மேலும் 26.7.2023 அன்று பூட்டி முத்திரையிடுதல் தொடர்பான அறிவிப்பும் வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர் நடவடிக்கை இன்னும் 15 நாட்களில் மேற்கொள்ளப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மழைநீர் வடிகால்வாய் மூடிகள் ( Slab) நகராட்சிப் பொறியாளர் மூலம் இன்னும் 10 நாட்களில் சரிசெய்யப்படும். மேலும் இம்முறை மன்றத்தில் ஆணையரான என்னால் அளிக்கப்படும் எனது 7.11.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், குளச்சல் நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டம், தேம்பிறவிளை என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.ரூபன் பொன்னுமணி என்பவர் தனது முறையீட்டு மனுவில், குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குளச்சல் திங்கள் நகர் ரோட்டில் (கிரி தங்கம் மருத்துவமனைக்கு எதிரில்), வடிகால் ஓடையினை ஆக்கிரமித்தும், விதிமீறியும் மற்றும் வாகன நிறுத்துமிடமின்றியும் கட்டட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதாக புகார் தெரிவித்துள்ளார்.

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நகரளவு எண்.A2/91-ல் திரு.முகம்மது பாரூக் என்பவருக்கு 1993 சதுர அடி பரப்பளவில் தரைதளத்தில் வணிகம் மற்றும் குடியிருப்பும் மற்றும் முதல் தளத்தில் குடியிருப்பு மட்டும், கட்டுவதற்கு குளச்சல் நகராட்சியின் 05.08.2020 நாளிட்ட கட்டட அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதே போல் நகரளவு எண்.A2/91-ல் திரு.கலீல் ரகுமான் என்பவருக்கு 1914 சதுர அடி பரப்பளவில் தரைதளத்தில் வணிகம் மற்றும் குடியிருப்பும் மற்றும் முதல் தளத்தில் குடியிருப்பும் கட்டுவதற்கு நகராட்சியால் 08.01.2022 நாளிட்ட கட்டட அனுமதி உத்தரவும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் கட்டட கட்டுமானப் பணிகள் குறித்து 16.12.2022 அன்று குளச்சல் நகராட்சியினரால் தல ஆய்வு செய்யப்பட்டதில், நகராட்சியால் வழங்கப்பட்ட கட்டட அனுமதி, ஆணைக்கு மாறாக இரு கட்டட அனுமதியையும் ஒங்கிணைத்து கூடுதலாக முதல்தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம் கட்டி வருவதால், மேற்காணும் இரு கட்டட உரிமையாளருக்கும், விதிமீறி கூடுதலாக கட்டிய கட்டுமானங்களை அகற்ற நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட ஆணைப்படி கட்டுவதற்கு அறிவிப்புகள் முறையே 04.01.2023 மற்றும் 03.03.2023 அன்று அனுப்பப்பட்டுள்ளதும், இதன் தொடர் நடவடிக்கையாக 26.07.2023 அன்று பூட்டி முத்திரையிடுதல் தொடர்பான அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதும் ஆவணங்களின் மூலம் தெரிய வருகிறது.

கட்டட உரிமையாளர் தனது கட்டடத்திற்கும், நெடுஞ்சாலை துறை சாலைக்கும் இடையில் உள்ள இடத்தில் இன்டர்லாக் டைல்ஸ், சாலை மட்டத்திற்கு மேல் அமைத்துள்ளதால், மழைநீர் எவ்வித அடைப்பு மற்றும் தடையின்றி வழிந்தோடுகிறது என்பதையும் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையினை ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து குளச்சல் நகராட்சி ஆணையாளரின் 03.08.2023 நாளிட்ட கடிதத்தில் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி தக்கலை நெடுஞ்சாலை துறை உதவி கோட்டபொறியாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதும் ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது.

அனுமதியின்றி விதிமீறி கட்டப்பட்ட கட்டடம் தொடர்பாக நகராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.07 நாள் 10.01.2023-ல் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56, 57 மற்றும் 80 (A) ன் கீழ் அனுமதியற்ற அபிவிருத்திகள் மீதான அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் வழிமுறைப்படுத்துதலுக்கான விதிகள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் வெளியிட்டுள்ளதன்படி, உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு 45 நாட்களுக்குள் அனுப்பி வைத்திடுமாறு குளச்சல் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்த இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் நகராட்சி ஆணையாளர் தனது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள மழைநீர் வடிகால்வாய் மூடிகள் (Slab) 10 நாட்களில் சரி செய்யப்படும் என தெரிவித்துள்ளபடி உரிய உடன் நடவடிக்கை மேற்கொண்டு அதன் அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்திற்கு

அனுப்பி வைக்குமாறு குளச்சல் நகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார். இதில் எவ்வித தாமதமும் இருக்கக்கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.ரூபன் பொன்னுமணி,
17–48A, தேம்பிறவிளை,
மேற்கு நெய்யூர் அஞ்சல் – 629 803,
கன்னியாகுமரி மாவட்டம்.

2) ஆணையாளர், குளச்சல் நகராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 251.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
22/11/23

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் ... சென்னை–600 032